

# Southern Builder

Bulletin of Builders Association of India - Southern Centre

For Private Circulation only

December 2017




## சாதனை பெண்கள்









jayaraj
Leaders in Timber
Jayaraj International (P) Ltd.,
(an ISO Certified Company 9001:2008)
Teak wood Logs | Teak Sizes | Door & Window Frames
Hard wood Logs & Sizes | Teak Planks | Doors
Leaders in Teak Wood
T. Raja Sekhar
Managing Director
Timber Yard : No.19, Jaya Street, Puzhal Union Road, Vadaperumbakkam, Chennai 600 060
Corporate Office : 12/1, First Floor, United India Colony, 4th Cross Street, Kodambakkam, Chennai 600 024
Enquiry Nos. : 098408 15812 / 093846 66606 / 093815 15555
Projects : 098400 70992 Fax No. : 044 2472 4688
Email ID : jayarajenquiry@gmail.com Website : www.jayarajtimber.com



# Southern Builder

Bulletin of Builders Association of India - Southern Centre

For Private Circulation only

Official Journal of Builders' Association of India - Southern Centre.

December 2017

**Builders' Association of India**
**Southern Centre**
Casa Blanca, 11, Casa Major Road,
Egmore, Chennai - 600 008.
Tel: 2819 2006, Telefax: 2819 1874
Email: baisouthern@yahoo.com
Website : www.baisouthern.com

## OFFICE BEARERS - 2017-18

**Thiru. K. Venkatesan** - Chairman
**Thiru. L. Venkatesan** - Vice Chairman
**Thiru. S. Ramaprabhu** - Secretary
**Thiru. R. Parthiban** - Joint Secretary
**Thiru. L. Shanthakumar** - Treasurer

**Editor**
**Thiru. Mu. Moahan** - 94444 48989

**Advisors**
**Thiru. R. Radhakrishnan**
All India Past President & Trustee - BAI
**Dr. D. Thukkaram**
All India Past Vice President & Trustee - BAI
**Thiru. J.R. Sethuramalingam**
All India Past Vice President & Trustee - BAI
**Thiru. K.Ramanujam**
All India Trustee

**Editorial Board**
Thiru. S. Ayyanathan
Thiru. S.D. Kannan
Thiru.P.K.P.Narayanan

## Contents

ஆசிரியர் மடல் - 04
மய்யத் தலைவர் மடல் - 05
Corrosion - 06
GST - Tax Corner 1 - 10
தகவல் பெறும் உரிமைச்சட்டம் - 13
GST - Tex Corner 2 - 23
பணமா பாசமா - 28
New Patron Members - 33
Southern Centre Activities - 34
Tariff - 35

## Disclaimer

The Materials Provided in this Publication are a free Service to its readers. No Copyright Violations are intended. Views expressed in this Publication are not necessarily of BAI. No direct or indirect or consequential liabilities are acceptable on the information made available herein.

# ஆசிரியர் மடல்



தினமும் நாம் அனைவரும் காலையில் கண்ணாடி முன் நிற்போம். நமது உருவத்தை அதில் பார்த்துக் கொள்வோம். நமது முகத்தை , உருவத்தை உடையை பார்த்து மகிழ்ச்சியோ வருத்தமோ கொள்வோம். அது நமக்கு சொல்லம் பாடத்தை தெரிந்து கொள்வோமா ?

கண்ணாடி நமது உருவத்தை உள்ளது, உள்ளபடி பிரதிபலிக்க கூடியது. அதில் நமது முகம் மற்றும் உருவம் எப்படி உள்ளதோ அதை சற்றும் மாறாமல் உண்மையை நமக்கு காட்டும். நாம் இனி கண்ணாடி முன்னால் நிற்கும் போது ஒரு நிமிடம் நிதானிப்போம்.

நமது முகம் தெளிவாக இருக்கிறதா என்று பாாக்கும்போது நமது அகம் (மனம்) தெளிவாக இருக்கிறதா என்று கவனிப்போம். அதில் எந்தவித அழுக்கோ, அழுக்காறோ இல்லாமல் பார்த்துக்கொள்வோம். உடையை கவனிக்கும் போதும் நமது அன்றைய நடவடிக்கைகள், நமது நடத்தை சிறப்பாக இருக்க உறுதி கொள்ள வேண்டும்.

கண்ணாடி நமது உருவத்தை எப்படி நமக்கு உண்மையை பிரதிபலிக்கிறதோ நமது மனமும் நமது செயலும் நமக்கு உண்மையை பிரதிபலிக்கும். நாம் புறத்தை நேர்த்தியாக பராமரிக்க விழையும்போது நமது அகமும் நேர்த்தியாக நேர்மையாக இருக்க உறுதி கொள்வோம்.

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்

– திருக்குறள்

அன்புடன்
மு. மோகன்

## அனைவருக்கும் இனிய புத்தாண்டு 2018
## மற்றும்
## பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

# மய்யத் தலைவர் மடல்



அன்பார்ந்த கட்டுநர் நண்பர்களே வணக்கம் !

நம்முடைய தொழிலை தொடர்ந்து முடக்கும் நிலையை எடுக்கும் தமிழக அரசைக் கண்டித்தும் தமிழக கட்டுமான தொழிலில் ஈடுபட்டுள்ள நமது குடும்பங்கள் பாதிக்கப்படக்கூடாது என்ற வேண்டுகோளுக்கு கடந்த 23.12.2017 அன்று ஒரு பத்திரிக்கையாளர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்து அதில் நம்முடைய பீஷ்மா R. இராதாகிருட்டிணன் அவர்கள் பங்கேற்று அதில் மணல் பிரச்சனை பற்றி தெளிவாகவும், தமிழக அரசு மணல் பிரச்சனையில் செய்யும் குளறுபடிகள் பற்றியும் அதே நேரம் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யும் மணல் பொதுப்பணித்துறை தான் கையாள வேண்டும் என்றும் தமிழக அரசு தேவையில்லா அரசாணைகளை பிறப்பித்து நம்முடைய கட்டுநர்களுக்கும் அவர்களை நம்பியுள்ள 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை இல்லாமல் நடுத்தெருவில் நிற்கும் நிலையையும் உருவாக்குகின்றது என்பதை தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறியும் இந்த அவல நிலையை தமிழக அரசு உடனடியாக போக்க தக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் கோரிக்கை வைக்கப்பட்டது.

மேலும் மனைகள் வரன்முறைப்படுத்துதலில் உள்ள குறைபாடுகளை போக்கி தமிழக அரசு அறிவித்துள்ள காலக்கெடு முடிந்து மேலும் ஆறு மாதகால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ள நிலையிலும் 1% மனைகள் கூட வரன்முறை ஒப்புதல் வழங்கப்படவில்லை என்பதை எடுத்துக் கூறியும், இது போன்ற அவல நிலையை தமிழக அரசு உடனே போக்கி அதிகாரிகளின் மெத்தனப்போக்கை கலைந்து தக்க நடவடிக்கைகள் எடுத்து பொது மக்களால் அனுமதிக்கு தாக்கல் செய்யப்படும் மனுக்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் அனமதி வழங்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

10.12.2017 அன்று மருத்துவமுகாம் நம்முடைய நிரந்தர உறுப்பினரான M/s. Sathyamurthy & CO நிறுவனமும் CMK Projects Pvt Ltd நிறுவனங்களின் பணியிடமான அத்திப்பட்டில் சிறப்பாக நடைபெற்றது. இதனை அகில இந்திய முன்னாள் தலைவர் திரு. R. இராதாகிருட்டிணன் அவர்கள் துவக்கி வைத்து உரை நிகழ்த்தினார். இந்த மருத்துவ முகாமில் 350 பேர் கலந்து கொண்டனர். அவர்களுக்கு இரத்த பரிசோதனை, உயர் அழுத்தப் பரிசோதனை, சர்க்கரைநோய் பரிசோதனை ஆகியவை செய்யப்பட்டது. மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டன. ஒரு தொழிலாளருக்கு சிறுநீரகத்தில் கல்லும் cardio Problem இருந்ததால் இலவச சிகிச்சைக்கு அப்பல்லோ மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டனர். 168 பேரில் 10 பேருக்கு Oral cancer இருந்தது. மேலும் 7பேர் Savitha பல் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு மேல சிகிச்சை பெறுகின்றனர்.

மாநில அளவிலான சிறப்பு கூட்டம் ஓட்டல் சவேராவில் மாலை 4 மணிக்கு நடைபெற்றது. அதில் நமது அகில இந்திய முன்னாள் தலைவர் திரு. R, இராதாகிருட்டிணன் அவர்கள் , மற்றும் அலுவலக நிர்வாகிகள் உட்பட 60 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அன்று 6 மணி அளவில் 2018ற்கான டைரி வெளியீட்டு விழாவும் நடைபெற்றது.

அன்புடன்

K.வெங்கடேசன்

# PREVENTION OF CORROSION RCC STRUCTURES IN THE COASTAL AREAS



**Dr.A.R.Shantha Kumar**
Professor

## 1. Introduction :

The entire coastal belt of Indian Peninsula is an extremely corrosive belt. Steel reinforcements in concrete structures along the coast are susceptible to corrosion which is mainly caused by the chloride ions present in the coastal environment. Corrosion does not occur in dry air. Oxygen and moisture are required to come in contact with steel. Corrosion also occurs in presence of moisture & oxygen, due to the ingress of chlorine through wind borne salt spray in coastal areas. Corrosion of reinforcing steel is one of the most important causes for deterioration of concrete structures in coastal environment. High permeability of poor quality concrete and poor detailing causes significant damages due to corrosion. This leads to fast deterioration and eventual collapse of concrete structures.

## 2. Environmental factors :

In coastal cities and towns there is rapid increase in industrial and other institutional activities and increase in population. The requirement to meet the needs of ground water has increased rapidly over the last two decades. Under the above condition there is substantial lowering of water table in many parts of coastal areas which stimulates the intrusion of sea water land ward. Thus salinity has spread over a larger area in land. Fig.1 shows the corrosion map of india published by CECRI, Karikudi The zone where chloride induced severe corrosion is indicated in red color.It can be seen that the problem area can extend upto 45 to 50 kilometers.

## 3. Types of Marine Corrosion

There are many types of marine corrosion that can occur to steel waterfront structures and many methods for corrosion control. In actual practice, these methods are combined in an overall corrosion control program. The most common types of metal corrosion occurring in a marine environment are described in Table 1.

## 4. The need for Good Quality Concrete :

In the cement concrete, when the cement hydrates, the constituent silicates reacts yielding calcium hydrate and calcium hydroxide. Besides, cement also gets converted rapidly into calcium hydroxide. These hydration products provide alkalinity to the concrete of PH about 13 to 13.5.





*Fig.1 Corrosion Map of India*

In this environment, a thin and adherent passive oxide film (gamma ferric oxide) is formed on the steel surface, which protects the steel from corrosion. This protective film is destroyed either due to the ingress of chlorides or due to the lowering of PH value of the concrete.

The chloride ions migrate through the concrete until they reach the steel reinforcement. Normally, the corrosion is initiated once the passivating film is destroyed due to the presence of the chloride ions at the steel–concrete interface, if oxygen and water are present. Since, the walls of pores in a cement paste absorb great amounts of chlorine, the chloride film can be formed on the steel surface only if the chlorine concentration exceeds a certain threshold value. Thus, we need to exercise a strict check on the maximum permissible chloride content in mixing water, aggregates to minimize the chlorides of internal type.

Based on the empirical data of prior research, a probable threshold value for destroying the passivity of the Iron-cement paste system is of a chloride hydroxyl ion molecular activity rate of 0.6 in solution at the Iron-paste interface. The amount of chloride required for initiating corrosion is thus, dependent upon the PH value of the liquid in the paste. When the PH is less than 11.5, corrosion may occur without chlorides but for a concrete of PH greater than 11.5, a measurable amount of chloride is required, and that amount increases as the PH at the iron-liquid interface increases. Thus it is clear that by maintaining a very high PH value for the concrete the possibility of corrosion due to chlorides can be minimized. It is also clear that to minimize the chlorides, moisture and air entering the concrete; we need to produce a dense void less concrete. It was established that the passivative oxide film can be maintained and initiation of the corrosion can be prevented as long as the PH at the concrete cover is about 10.5 to 11. Reduction of Alkalinity of concrete occurs by leaching of alkaline substances with water, or by it's reactions with carbon-dioxide in the atmosphere thus allowing the carbon-=dioxode and any dampness in the concrete to form carbonic acid, which causes corrosion. Thus, to prevent corrosion, the high alkalinity of the concrete is required to be maintained. The coefficient of permeability of normal concrete is much less than that of a granite that physically no water will permeate through in a perceptible manner. However in actual practice, it is noticed that the mortar and concrete exhibit appreciable permeability. This is due to the formation of micro cracks due to drying shrinkage, structural stresses, existence of entrapped air due to insufficient compaction etc. Thus good construction practices are to be followed.

## 5. Preventive Measures :

To protect the steel we need preventive measures. The well known methods are:

1. Physical barieres on concrete surface
2. Protective coating on rebars
3. Electrochemical methods
4. Chemical methods

Table 1. Types of marine corrosion

| Type | Description | Remarks |
|---|---|---|
| Galvonic Corrosion | Two dissimilar metals connected to each other electrically in an electrolyte(eg : Sea water). Current flows through the electrolyte for the more reactive metal( anode) to the less reactive metals( the cathode),thereby corroding the anode area while protecting the cathode area from corrosion. | 1. New steel is anodic to oldsteel.<br>2. Brightly cut surfaces (eg., pipe threads) are anodic to uncut surfaces.<br>3.Steel is anodic to its surface mill scale.<br>4.Highly stressed areas (eg., pipe bends) are anodic to less stressed areas. |

| | | |
|---|---|---|
| Stray Current | Occurs on metal surfaces wherever stray direct current passes from them to an electrolyte. This current most frequently arises from electric railway and crane systems,improperly grounded welding generators, and adjacent cathodic protection system. | Stray current corrosion should always be suspected as the cause of accelerated corrosion in areas adjacent to sources of DC current and checked for by detection of current flow. |
| Differential Environmental | Occurs from differences in chemical composition of the medium.Usually results from different levels of aeration(oxygen content);less frequently from different salinities | Corosion occurs in area of lower oxygen content.On steel piling,this is just below the mean low tide level. Also in crevices and corners because less oxygen is there. |
| Erosion - Corrosion | Scouring action of sand other abrasives exposes bright metal and keeps the corrosion active | 1. Commonly found at or just above the mud line on steel piling or riser chains of moorings.<br>2. Wind in sandy areas. |
| Biological Corrosion | Marine biological oraganisms accelerate corrosion by changing the normal environment | 1. Organisms may create different oxygen levels in the electrolyte.<br>2.Organisms may create corrosive products through their metabolism or decomposition.<br>3.Organisms may remove the protective flim of corosion products from metal surfaces. |

Of the four methods Fusion bonded epoxy coating offers best protection as can be seen based on test results.

The salt spray test is the most appropriate for marine corrosion study. The test generates a corrosive marine environment. Here the test is used to compare different coating methods. The testing is conducted in a closed chamber. The salt solution is sprayed by a nozzle. This produces corrosive environment inside the chamber. The results of reinforcing bars tested in a fog cabinet for 28 days are reproduced in Fig.2. It should be noted that the bars were exposed to 5% Sodium chloride fog at 35 degrees following ASTM protocol. Quantitatively the values of corrosion rate are given in Table 2. The average corrosion rate in micrometers per year is the lowest for fusion bonded epoxy coated steel without holidays.




Fig.2. Relative Corrosion of bars in a Fog Chamber

### 6. Need to protect steel in Foundations :

It was shown that the salinity in soil in coastal areas is increasing. vThis has been conclusively shown by the “Seawater-Freshwater Interface study” by Government of TamilNadu Hence there is an urgent need to provide fusion bonded epoxy coating to bars in foundations. This is because the water table in the coastal area fluctuated in summer and winter introducing alternate wetting and drying condition.

**Table 2 Average corrosion rate of different steels**

| Bar Type | Condition | Average Corrosion Rate Micrometer /Year |
|---|---|---|
| Carbon Steel | as received | 914.7 |
| Carbon Steel | sandblasted | 1557.6 |
| Galvanized | no hole | 1190.2 |
| Galvanized | with hole | 1281.0 |
| LCC (MMFX) | as received | 625.0 |
| LCC (MMFX) | sandblasted | 523.6 |
| Stainless steel 3CR12 | sandblasted | 296.8 |
| Stainless steel 2201 | sandblasted | 29.7 |
| Stainless steel 2205 | as received | 1.9 |
| Stainless steel 316LN | as received | 1.2 |
| Epoxy-Coated (New) | without hole | * |
| Epoxy-Coated (New) | with hole | * |
| Epoxy-Coated(Old) | with hole | * |

**Fig.3 shows a typical foundation in the coastal area being provided with Fusion Bonded Epoxy coated steel reinforcements.**




Fig.3 North Chennai 2X500MW Foundation provided with FBECS

**7. Conclussion :**

Rebar corrosion is both broad in scope and practical in application, addressing reinforcing materials, corrosion protection techniques and the concrete itself.

1. Use of FBEC offers an economical practical solution
2. It is necessary to coat and protect steel in the foundations and runways because of marine intrusions and salinity of water.

**8. References :**


1. --------"Seawater-Freshwater Interface Study Along the Coast of TamilNadu",Chief Engineer,PWD,Chennai
2. "RCC Structures in Coastal Areas" http://the constructor.org/
3. A.R.Santhakumar " Concrete Technology" Oxford University Press, 2012


**************************************************



# GST

S.D.Kannan

Tax Corner

## 24 NEW FAQS ON GST REPLIED BY GOVERNMENT ON 22.12.2017

**Answer:** As decided at the 24th GST Council meeting, nationwide e-way Bill will be made compulsory from 01.02.2018; trials to start from 16.01.2018

**Question 2:** **What is the last date for filing TRAN-1?**

**Answer:** 27.12.2017. Please refer Orders 9/2017-GST and 10/2017, both dated 15.11.2017

**Question 3:** **Does aggregate turnover include value of inward supplies received on which RCM is payable?**

**Answer:** Aggregate turnover does not include value of inward supplies on which tax is payable on reverse charge basis. Please refer to section 2 (6) of CGST Act.

**Question 4:** **I exported without payment of IGST. Now RFD option is available on common portal. Can I opt for the refund of unutilised ITC?**

**Answer:** Yes you may. Please refer circular 17/17/2017 dt. 15.11.2017 for detailed procedure

**Question 5:** **What is the last date for filing Form GST ITC-04?**

**Answer:** 31.12.2017. Please refer to notification No. 63/2017-CT, dt 15.11.2017

**Question 6:** **What if the dealer migrated with wrong PAN as the status of firm was changed from proprietorship to partnership?**

**Answer:** New registration would be required as Partnership firm would have new PAN.

**Question 7:** **What are the requirements for clearance of physician samples distributed free of cost?**

**Answer:** In case of clearance of free physician samples, the ITC availed on the said samples has to be reversed tinder S. 17(5)(h) of the CGST Act, 2017. No tax is payable on clearance of physician samples distributed free of cost as the value of supply is zero.

**Question 8:** **I am a software company. If I import software services, am I eligible to pay IGST?**

**Answer:** Yes, as it is an inter-State supply under section 7 (4) of the IGST Act, you will be liable to pay IGST.

**Question 9:** **I export services but turnover is below threshold. Should I take registration?**

**Answer:** Yes, as it is an inter-State supply, you are liable to take mandatory registration under section 24.

**Question 10: I am a small startup firm. What is the frequency of filing FORM GSTR-1 and FORM GSTR-3B?**

**Answer:** If your turnover is below Rs. 1.5.Crore, you have to file GSTR-1 quarterly (Notfn 57/2017-Central Tax dt 15.11.2017). All taxpayers are required to file GSTR-3B monthly, until March 2018. (Notfn 56/2017-CT, dt 15.11.2017 and Notfn 35/2017-CT, dt 15.09.2017)

**Question 11: What is the time limit for availing input credit under GST?**

**Answer:** As per S. 16(4) of the CGST Act, ITC is not available after the due date of furnishing the return for the month of September of the next year or furnishing of the annual return, whichever is earlier.

**Question 12: Can refund of ITC accumulated on purchase of capital goods used for business be done?**

**Answer:** No, it is not allowed

**Question 13: For an under construction flat where the transaction was initiated post 1st July, how do I confirm if the builder has revised the pricing accordingly to the ITC claimed?**

**Answer:** The builder needs to adjust his price (without taxes) to the extent of ITC available to him.

**Question 14: Whether civil contractor doing projects in various States requires separate registration for all States or a single registration at State of head office will suffice?**

**Answer:** A supplier of service will have to register at the location from where he is supplying services.

**Question 15: Is salary by partnership firm to partners as per Income Tax Act liable to GST?**

**Answer:** No GST is leviable on salary.

**Question 16: What duties are levied on import of goods?**

**Answer:** Customs duty and cess as applicable + IGST+ GST compensation cess if any

**Question 17: When is the tax to be paid on advances received in case of supply of goods?**

**Answer:** For persons other than composition dealers, at the time of issuance of invoice or its clue date. Please refer notification 66/2017-CT, dated 15.11.2017.

**Question 18:** **I received the services in June, 2017 and made payment in August 2017. Is GST applicable?**

**Answer:** Please check the Point of Taxation Rules, 2011 to know if point of taxation has been completed in this case in June 2017. If so, this transaction is liable to Service Tax, not GST.

**Question 19:** **Is a job worker required to take registration?**

**Answer:** As job work is a service, it would be considered a supply and the job worker would be required to obtain registration if his aggregate turnover exceeds Rs.20 lakhs or, Rs.10 Lakhs in special category states except the State of Jammu and Kashmir.

**Question 20:** **I short paid the tax for the month of Sep 2017 and will deposit the remaining now. Is interest applicable?**

**Answer:** Yes. Interest is applicable on this.

**Question 21:** **Are local bodies allowed to make deduction under section 51? If not, how do I claim refund of the same?**

**Answer:** No, deduction under section 51 has not yet been notified. For refund of wrongly deducted tax, please see section 51 (8).

**Question 22:** **Education Cess and SHE Education Cess carried forward in ER-1-whether eligible for ITC?**

**Answer:** No. Credit of Education Cess and SH Education Cess cannot be carried forward.

**Question 23:** **I supply through an e-commerce operator whose turnover is below Rs. 20 lacs. Should I take registration?**

**Answer:** If you are a supplier of services with turnover below Rs. 20 Lac, you are exempted from registration. Please refer Notification No. 65/2017 – Central Tax, dated 15.11.2017

**Question 24:** **Is a job worker required to take registration?**

**Answer:** As job work is a service, it would be considered a supply and the job worker would be required to obtain registration if his aggregate turnover exceeds Rs.20 lakhs or, Rs.10 Lacs in special category states except the State of Jammu and Kashmir.

*******************************************************************

# தகவல் பெறும் உரிமைச்சட்டம்
## வழிகாட்டி கையேடு

### சட்டத்தின் நோக்கங்கள்

- அரசு அலுவலகங்கள் ஒவ்வொன்றின் செயல்பாட்டிலும் வெளிப்படையான ஒளிவு மறைவற்ற நிலையைக் கொண்டு வருதல
- அரசு மற்றும் அரசு சார்ந்த அலுவலகங்களில் செயலாற்றுபவர்களிடையே பொறுப்புடமையை மேம்படுத்துதல்
- அரசு மற்றும் அரசு சார்ந்த அலுவலகங்களின் செயலாற்றல் குறித்த தகவல்களைப் பெற விரும்பும் குடி மக்களுக்கு, அதை அளிக்க வகை செய்வதோடு, ஊழலை ஒழித்தல்.
- அரசு மற்றும் அரசு சார்ந்த அலுவலகங்களைப் பொறுப்புடையதாக ஆக்குவதோடு உள்ளார்ந்த தகவல்களின் ரகசியத்தைக் கட்டிக் காத்தல்.

### மாநில தகவல் ஆணையம்

தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005, பிரிவு 15ன்படி தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம் உருவாக்கப்பட்டு, அவ்வாணையம், ஒரு மாநில தலைமைத் தகவல் ஆணையர் மற்றும் இரண்டு மாநில தகவல் ஆணையர்களின் கீழ் 07.10.2005 முதல் இயங்கி வருகிறது.

### பொது தகவல் அலுவலர் மற்றும் உதவி பொது தகவல் அலுவலர் நியமனம்

இச்சட்டம் பிரிவு 5, உட்பிரிவு (1)ன்படி, தகவலுக்காக விண்ணப்பிக்கும் நபர்களுக்கு, தகவல் அளிக்க ஏதுவாக, ஒவ்வொரு அலுவலகங்களிலும், பொது தகவல் அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் உட்பிரிவு 2ன்படி, தகவல் கோரும் விண்ண்ப்பங்களை அல்லது மேல்முறையீடுகளைப் பெற்று, அவற்றை பிரிவு 19, உட்பிரிவு 1ன்படி, பொது தகவல் அலுவலருக்கோ அல்லது மாநில தகவல் ஆளையத்திற்கோ அனுப்பி வைப்பதற்காக அலுவலர் ஒருவர் ஒவ்வொரு உட்கோட்ட அல்லது உள் மாவட்ட நிலையில் உதவி பொதுத்தகவல் அலவலராகப் பணியமர்த்தப்பட்டுள்ளார். (தலைமைச் செயலகம், துறைத்தலைவர் அலுவலகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் தகவல் பெறுவதற்காக பொது தகவல் அலுவலர், மேல்முறையீட்டு அலுவலர் போன்றவர்களின் அஞ்சல் முகவரி, தொலைபேசி எண், நிகரி எண் போன்றவைகள் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

### தகவல் பெறுவதற்கான வேண்டுகோள் செய்யப்படுதல் வேண்டிய முறை

- இச்சட்டப் பிரிவு 6ன்படி, தகவல் பெற விரும்பும் நபர், ஆங்கிலம் அல்லது தமிழ் மொழியில், எழுத்து வடிவிலோ அல்லது மின்னணு வழியிலோ, உரிய அலுவலகத்திலுள்ள பொது தகவல் அலுவலர் அல்லது உதவி பொது தகவல் அலுவலகர்களிடத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அதனுடன், இதற்கான இன்றைய கட்டணமான ரூ.10/- (பத்து மட்டும்) பணமாகவோ, வரையோலையாகவோ அல்லது அரசு கருவூல சீட்டு மூலமாகவோ, அந்த அலவலகத்தில் செலுத்த வேண்டும். விண்ணப்பத்தாரர் தன்னால் கோரப்படும் தகவலின் விவரங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு எழுத்து வடிவில் விண்ணப்பம் செய்ய முடியாதவிடத்து, அதனை எழுத்து வடிவில் கொணர்ந்திட தகுந்த, எல்லா உதவிகளையும் பொது தகவல் அலுவலர் அல்லது உதவி பொது தகவல் அலுவலர் செய்திட வேண்டும்.
- யூகவலுக்காக விண்ணப்பம் செய்கிற விண்ணப்பத்தாரர்களிடமிருந்து அந்த தகவலைக் கோருவதற்கான காரணத்தைக் கேட்டல் கூடாது. மேலும், அவரை தொடர்பு கொள்வதற்காக தேவையான விவரங்களைத் தவிர, தனிப்பட்ட சொந்த விவரங்கள் எவற்றையும் தகவல் பெற விரும்புபவர்களிடமிருந்து கோருதல் கூடாது.
- ஒரு தகவலுக்காக அரசு மற்றும் அரசு சார்ந்த அலவலகம் ஒன்றிடம் விண்ணப்பம் செய்யப்படுகிறவிடத்து, அந்தத் தகவல்

  (அ) பிறிதொரு அரசு அல்லது அரசு சார்ந்த அலுவலகங்களில் வைத்திருக்கப்பட்டதாக : அல்லது

  (ஆ) அதன் உறு பொருள் பிறிதொரு அரசு மற்றும் அரசு சார்ந்த அலுவலகங்களின் செயற் பணிகளுடன் மிக நெருங்கிய தொடர்புடையதாக இருக்குமிடத்து,

  அந்த விண்ணப்பத்தினை அல்லது அதன் உரிய பகுதியை சம்மபந்தப்பட்ட அலுவலகங்களுக்கு மாற்றல் செய்து, அத்தகைய மாற்றல் குறித்து விண்ணப்பதாரருக்கு உடனடியாக தெரிவிக்கப்படல் வேண்டும். இதனை இயன்ற அளவு விரைவாக செய்திடல் வேண்டும். எந்நேர்விலும் அந்த விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து ஐந்து நாட்களுக்கு மிகைப்படாமல் செய்யப்பட வேண்டும்.

## தகவல் பெறுவதற்கான மாதிரி கடிதப்படிவம்

(இதைக் கேட்கும் தகவலுக்கேற்ப மற்றும் சூழலுக்கேற்ப மாற்றிக் கொள்ளலாம்)

அனுப்புநர்:

(விண்ணப்பதாரரின் பெயரும், முகவரியும் குறிப்பிட வேண்டும்)

பெறுநர்:

(உரிய அலுவலகத்தின் பொதுத்தகவல் அலுவலர் /
உதவி பொதுத்தகவல் அலுவலர் முகவரி குறிப்பிடப்பட வேண்டும
ஐயா / அம்மையீர்,
தயவு செய்து கீழ்கண்ட தகவல்களை கொடுக்க வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

## தகவல் விவரம்

1. நான் கீழ்கண்ட ஆவணங்களை பார்வையிட அனுமதிக்க வேண்டுகிறேன். (பார்வையிட விரும்பும் ஆவணங்கள்)
2. எனக்கு கீழ்கண்ட ஆவணங்களின் படிகளை கொடுக்குமாறு வேண்டிக் கேட்டுடக கொள்கிறேன். (ஆவணங்களின் விவரம்)
3. நான் தகவல் அறியும் கட்டணங்கள் செலுத்தியுள்ளேன், அதன் விவரங்கள் கீழ்வறுமாறு கட்டணம் செலுத்தியதற்கான சான்றுகளை இணைத்துள்ளேன்.
4. எனக்கு மேற்கண்ட தகவல்கள் / ஆவணங்கள் அவசரமாக தேவைப்படுகின்றன. விரைவில் எனக்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இடம்
நாள் விண்ணப்பதாரர் கையொப்பம்

## கோரிக்கையின் மீதான நடவடிக்கைகள்:

- கோரிக்கை பெற்ற 30 நாட்களுக்குள் விண்ணப்பதாரருக்கு தகவல் அறிக்க வேண்டும் அல்லது விண்ணப்பதாரரின் கோரிக்கையை ஏற்க மறுக்குமிடத்து, தகவல் பெறும் உரிமை சட்டம் 2005, பிரிவுகள் 8 மற்றும் 9ல் குறிப்பிட்ட ஏதேனும் ஒரு பொருத்தமான காரணத்தைச் சுட்டிக்காட்டி நிராகரிக்க வேண்டும்.
- கோரப்பட்ட தகவலானது, ஒருவருடைய உயிர் அல்லது சுதந்திரம் தொடர்புடையதாகயிருப்பின், அதற்கான கோரிக்கை பெறப்பட்ட 48 மணி நேரத்திற்குள்இ தகவல் அளிக்கப்படுதல் வேண்டும்.
- குறித்துரைக்கப்பட்ட கால கெடுவிற்குள் கோரப்பட்ட தகவலின் பேரில் முடிவு எதனையும் அளிக்க தவறுமிடத்து, சம்மந்தப்பட்ட பொது தகவல் அலுவலர், அக்கோரிக்கையினை ஏற்க மறுத்ததாகவே கருதப்படும்.
- கோரிக்கையின் மீது தகவல் அளித்தல் குறித்து முடிவு எடுக்குமிடத்து, பொதுத்தகவல் அலுவலகர் அந்த தகவல் அளிப்பதற்கான கூடுதலான கட்டணம் ஏதேனுமிருப்பின், அதைச் செலத்தக் கோரி விண்ணப்பத்தாரருக்கு தெரிவிக்க வேண்டும்.
- இந்த விவரத்தினை அனுப்புவதற்கும், கூடுதலான கட்டணத்தை செலுத்துவதற்கும் இடையே உள்ள காலத்தினை ஏற்கனவே குறிப்பிடப்பட்ட 30 நாட்கள் கால அளவையில் சேர்த்துக் கொள்ளக் கூடாது.
- மேல் முறையீட்டு அலுவலர், மேல் முறையீட்டிற்கான காலக்கெடு, அதனை செயல்படத்த வேண்டிய முறை மற்றும் விதிக்கப்பட்ட கட்டணங்கள் உள்ளடங்கிய விவரங்களை, முடிவின் மீதான மறு ஆய்விற்காக, மனுதாரருக்கு அளித்தல் வேண்டும்.
- மனுதாரர் புலன் சார்ந்த ஊனமுற்றவராக இருக்குமிடத்து, பொது தகவல் அலுவலர், அவருக்கு ஆவணங்கள் உள்ளிட்ட அனைத்து தகவல்களையும் பாடர்வையிடுவதற்கு உரிய உதவிகள் அளித்தல் வேண்டும்.
- தகவல்கள் அச்சடிக்கப்பட்ட படிவத்தில் அல்லது மின்னணு படிவத்தில் இருக்குமிடத்து, அதற்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விண்ண்பபத்தாரர் செலுத்துதல் வேண்டும்.
- மேற்கூறிய கட்டணங்கள் அனைத்தும், நியயமாக இருப்பதோடு மட்டுமல்லாமல், மனுதாரர் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள நபராக இருக்குமிடத்து, மேற்கூறிய அனைத்து கட்டணங்களையும் அவரிடமிருந்து வசூலிக்கக் கூடாது.
- பொதுத் தகவல் அலுவலர், குறிப்பிட்ட கால கெடுவிற்குள் தகவலை அளிக்க தவறுமிடத்து, தகவல் பெறும் உரிமைச்சம் 2005, பிரிவு 7 உட்டபிரிவு 5ன்படி நிர்ணயிக்கப்பட்ட கட்டணமின்றி, விண்ணப்பதாரருக்கு அந்த தகவலை அளிக்க வேண்டும்.
- மனுதாரரின் கோரிக்கையின் மீது தகவல் அளிக்க முடிவெடுக்கும் முன்னர், பொதுத் தகவல் அலுவலர், இச்சட்டத்தின் பிரிவு 11ன்

கீழ் உட்பட்டு, முன்றாம் தரப்பினரால் செய்யப்பட்ட முறையீட்டினையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

- மனுதாரரின் விண்ணப்பத்தினை நிராகரிக்குமிடத்து, விண்ணப்பதாரருக்கு பொதுத்தகவல் அலுவலர் கீழ்கண்ட தகவல்களையும் தெரிவித்தல் வேண்டும்.
    1. விண்ணப்பத்தினை மறுப்பதற்கான காரணங்கள்
    2. அவ்வாறு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து மேல்முறையீடு எந்த கால கெடுவிற்குள் செய்யப்பட வேண்டும்.
    3. மேல் முறையீட்டு அலுவலர் குறித்த விவரங்கள்
- அரசின் பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் தகவல்கள் மற்றும் வள ஆதாரங்களை திசை திருப்பக்கூடிய தகவல்களைத் தவிர, ஏனைய தகவல்களை, அதற்குரிய சாதாரண படிவத்திலேயே வழங்கலாம்.

## கட்டணங்கள்

- தகவல் உரிமைச் சட்டம் 2005, நியாயமான விண்ணப்பக் கட்டணம் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று கூறுகிறது. மேலும், தகவல் அளிப்பதற்கான கூடுதலான கட்டணம் தேவைப்பட்டால், எவ்வாறு அத்தொகைக் கணக்கிடப்பட்டு அக்கட்டணம் எட்டப்பட்டது என்று சுட்டிக்காட்டி, எழுத்துருவில் விண்ணப்பத்தாரருக்கு தெரிவிக்கப்படுதல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் பொதுத்தகவல் அலுவலரால் விதிக்கப்பட்ட கட்டண நிர்ணய முடிவின் மீது, உரிய மேல்முறையீட்டு துறையிடம் மறு ஆய்வு செய்யுமாறு நாடலாம்.
- வறுமை கோட்டிற்குக் கீழ் வாழ்பவருக்கு, கட்டணம் விதிக்கப்படுதல் கூடாது.
- பொதுத்தகவல் அலுவலர், குறிப்பிட்ட கால கெடுவிற்குள் தகவலை அளிக்கத் தவறினால், கட்டணமின்றி, விண்ணப்பத்தாரருக்கு அத்தகவலை வழங்குதல் வேண்டும்.
- இச்சட்டத்தின் 6(1) பிரிவின்படி தகவலுக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் அரசு அல்லது அரசு சார்ந்த அலுவலகத்தால் குறித்துரைக்கப்பட்ட கணக்குத் தலைப்பில், ருபாய்10 /- ரொக்கமாகவோ, வரைவு காசோலையாகவோ, கருவுல சீட்டு அல்லது வங்கி வரைவோலையாகவோ சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.
- இச்சட்டத்தின் 7(1) பிரிவின்படி தகவல் வழங்குவதற்காக அரசு அல்லது அரசு சார்ந்த அலுவலகங்களால் பின்வரும் விகிதங்களில் குறித்துரைக்கப்பட்டவாறு கணக்குத்தலைப்பில் சரியான ரொக்க ரசீவது வரைவு காசோலை, வங்கி காசோலை வழியே விதிக்கப்பபட்ட கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும். அவை முறையே :
    1. A4, A3 அளவுத்தாளில் எழுதி உருவாக்கப்பட்ட அல்லது படியெடுக்கப்பட்ட ஒவ்வொரு பக்கத்திற்கும் ருபாய் இரண்டு.
    2. பெரிய அளவுத் தாளுக்கான படி ஒன்றின் உள்ளபடியான கட்டணம் செலவுத்தொகை.
    3. மாதிரிகள் அல்லது மாதிரி படிவங்களுக்கான உள்ள செலவு அல்லது விலை.
    4. பதிவுருக்களை ஆய்வு செய்வதற்கு, முதல் ஒரு மணி நேரத்திற்கு, கட்டணம் எதுவும் இல்லை. அடுத்த பதினைத்து நிமிடங்களுக்கு அல்லது அதன் பின்னும் ருபாய் ஐந்த கட்டணம் ஆகும்.
- இச்சட்டத்தின் 7(5)ம் பிரிவின்படி தகவல் வழங்குவதற்காக, அரசு அல்லது அரசு சார்ந்த அலுவலகங்களால், பின்வரும் விகிதங்களில் குறித்துரைக்கட்டவாறு கணக்குத் தலைப்பில் சரியான ரொக்க ரசீத, வரைவு காசோலை, வங்கி காசோலை வழியே விதிக்கப்பட்ட கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும். அவை முறையே,
    1. மின்னணு வழியிலான டிஸ்கெட் / பிளாப்பி ஒன்றிற்கு ருபாய் ஐந்து கட்டணம்
    2. அச்சடித்த படிவத்தில் தகவல் வழங்குகைக்கு வெளியிட்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட விலை

        (அரசு ஆணை (நிலை) எண் 989, பொதுத்துறை நாள் 07.10.2005)

        (அரசு ஆணை (நிலை) எண் 1012, பொதுத்துறை நாள் 20.09.2006)

## தகவலினை வெளியிடவதிலிருந்து விலக்களிப்பு (சட்டப்பிரிவு 8)

குடிமக்கள் எவருக்கும் கீழ்கண்ட தகவலை அளிக்கத் தேவையில்லை

- இந்தியாயவின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாடு, நாட்டின் பாதுகாப்பு, படைத்திறன் அறிவியல் அல்லது பொருளாதாரம் சார்ந்த நலன்கள், அயல்நாட்டுடன் கொண்டுள்ள உறவை பாதிக்கப்படும் அல்லது குற்ற செயலினை தூண்டுதலாக அமையும் தகவல்கள் :
- நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயத்தால் வெளிப்படையாக தடைசெய்யப்பட்ட தகவல்கள் அல்லது அந்த தகவலை வெளிப்படுத்துவதால் நிதிமன்றத்தை அவமதிப்பதாக அமையக்கூடிய தகவல்கள் :
- நாடாளு அல்லது மாநில சட்டமன்ற சிறப்புரிமையை மீறுவதாக அமையும் தகவல்கள்
- எந்த ஒரு தகவலானது பொது மக்களின் பேரளவு நலனுக்கு அவசியமானது என்று அரசு கருதுகிறதோ அந்தத் தகவல் மற்றும் முன்றாம் தரப்பினரின் போட்டி நிலைக்கு தீங்காகும் தகவலான வணிக நம்பகத்தன்மை, வியாபார ரகசியங்கள், அறிவார்ந்த சொத்துடமை உள்ளிட்ட தகவல்கள் :

- பொது மக்களின் நலனுக்கு தேவையானது என்று அரசால் கருதப்படுகிற தனி நபர் ஒருவருக்கு கிடைத்த நம்பகத்தன்மை உடைய தகவல்கள் :
- அயல்நாட்டு அரசிடமிருந்து பெறப்பட்ட ரகசிய தகவல்கள்
- நாட்டின் பாதுகாப்பு நோக்கத்திற்காகவும் மற்றும் சட்டத்தினை செயல்படுத்துவதற்காகவும் கிடைத்த மூலம் மற்றும் உதவி அதாரங்களை இனங்காட்டக்கூடிய தகவல்கள்
- தனி நபர் உயிர் மற்றும் உடலுக்கு ஆபத்த விளைவிக்கக்கூடிய தகவல்கள்
- வெளிபடுத்தப்பட்டால், புலனாய்வு நடவடிக்கைக்கு அல்லது குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு தடையாயிருக்கும் அல்லது குற்ற வழக்கு தொடர்தலைத் தடை செய்திடம் தகவல்கள்:
- அமைச்சர்கள், குழுச் செயலாளர்கள் மற்றும் பிற அலவலகர்களின் கலந்தாய்வுகள் குறித்த பதிவுருக்கள் உள்ளிட்ட அமைச்சரவை ஆவணங்கள், எனினும் அமைச்சர் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகள், அதற்கான காரணங்கள், எதன் அடிப்படையில் அம்முடிவுகள் எடுக்கப்பட்டன என்பதை, மடிவு எடுக்கப்பட்ட பின்னர், பொத மக்களுக்கு தெரியப்படுத்தலாம்
- சூரு தகவமைல வெளியிடுவதால் உள்ள நலன், பாதுகாக்கப்பட்ட நலன்களுக்கான தீங்கை விட மிகுந்து இருக்குமிடத்து, 11923ம் ஆண்டு அலுவலக சார் ரகசிய சட்டம் 1923 (9.1923) ல் அல்லது தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005 பிரிவு 8ன்படி அனுமதிக்கத்தக்க விக்களிப்புகள் எதிலும் அடங்கியுள் எது எவ்வாறு இருப்பினும் தகவலை அணுகி பெற அனுமதிக்கலாம்.
- ஒரு விண்ணப்பம் செய்யப்பட்ட தேதிக்கு 20 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த சம்பவம், நிகழ்வு அல்லது நடந்த காரியம் தொடர்பான தகவல்கள், தகவல் சட்டம் 2005 பிரிவு 8 உட்பிரிவு 1(a.c and I)ல் வகைகளுக்கு உட்பட்டு, கோரிக்கையினை செய்த நபருக்கு தகவல் அளிக்க வேண்டும். இச்சட்டத்தின் கிழ் வகை செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டு முறைகளுக்கு உட்பட்டு அந்த 20 ஆண்டு காலத்தினை கணக்கிடுவதில் பிரச்சனை எழும்பட்சத்தில் மத்திய அரசின் முடிவே இறுதியானதாகும்.
- தகவலை பெறுவதற்கான கோரிக்கையானது, அரசு அல்லாத தனி நபரிடமிருந்து வருகிற பதிர்புரிமையை மீறுவதாக இருக்குமிடத்து, இச்சட்டம் 8ம் பிரிவின் வகை முறைகளுக்கு பாதிப்பின்றி, அக்கோரிக்கையை நிராகரிக்கலாம்.

## தகவல் வெளியிடுவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட பகுதியிலிருந்து பிரித்தளித்தல்

தகவலினை பெறுவதற்கான கோரிக்கையானது, வெளியிடுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிற தகவலுடன் தொடர்புடையதாக இருக்கிறது என்ற காரணத்தால் நிராகரிக்குமிடத்து, வெளியிடுவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட பகுதியிலிருந்து, நியாயமான முறையில் பிரித்தளிக்கப்படக் கூடிய தகவல் எதுவும் அளிக்கலாம். அவ்வாறு வழங்குமிடத்து, பொதுத்தகவல் அலுவலர், விண்ணப்பத்தாரருக்குக் கீழ்கண்ட அறிவிப்பை அளித்தல் வேண்டும்.

1. வெளியிடப்படுவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட தகவலைக் கொண்டுள்ள பதிவுருவிலிருந்து பிரித்தெடுத்தபின், கோரப்பட்ட பதிவுருவின் பகுதி மட்டுமே அளிக்கப்படுகிறது என்றும்
2. பொருண்மை பற்றிய எந்த முடிவையும் உள்ளடங்கலாக, அந்த முடிவுகளுக்கு ஆதாரமான பொருளைக் குறிப்பிட்டு, அந்த முடிவிற்கான காரணங்கள்
3. அந்த முடிவினை அளிக்கின்ற நபரின் பெயர் மற்றும் பதவியின் பெயர்
4. அவரால் கணக்கிடப்பட்ட கட்டணங்களின் விவரங்களையும், விண்ணப்பதாரர் வைப்பீடு செய்யுமாறு கோரப்பட்ட தொகையையும் தெரிவித்தல்
5. தகவலின் ஒரு பகுதியை வெளியிடாமை தொடர்பான முடிவை, மறு ஆய்வு செய்வதற்க, பணி முப்பு அலுவலர் அல்லது மாநில தகவல் ஆணையம் பற்றிய விவரங்கள், கட்டணத்தொகை, தகவல் முறை மற்றும் காலவரம்பு ஆகியவற்றைத் தெரிவித்தல் வேண்டும்.

## விலக்களிக்கப்பட்ட அரசு அல்லது அரசு சார்ந்த அலுவலகங்கள்

தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின்படி கீழ்கண்ட அலுவலகங்களக்கு மக்கள் தகவல் பெற அணுகுவதிலிருந்து விலக்களித்துள்ளது. அவை முறையே

1. தனிப்பிரிவு-குற்றப்புலனாய்வுத்துறை சி.ஐ.டி
2. கியு பிரிவு – குற்றப்புலனாய்வுத்துறை சி.ஐ.டி.
3. தனிப்பரிவு
4. பாதுகாப்புப்பிரிவு
5. கோர்செல் சி.ஐ.டி
6. கருக்கெழுத்த அமைவனம்
7. மாவட்டத் தனிப்பிரிவுகள்
8. தனிப்புலனாய்வு செல்கள்
9. காவல்துறை ஆணையரப்புலனாய்வுப்பிரிவுகள்
10. ஆணையரங்கள் / மாவட்டங்களிலுள்ள
11. நக்சலைட்டு தனிப்பிரிவு
12. குற்றப்பிரிவு சி.ஐ.டி.
13. தனிப்புலனாய்வுக் குழு
14. திரைத்திருட்டு பிரிவு
15. போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவு அமைவனம்
16. கொள்கைக்கெதிர் பிரிவு
17. பொருளாதாரக் குற்றச் செயல்கள் சரகம் I & II
18. சிலைத் திருட்டுத் தடுப்பு சரகம்
19. சிசிஐ டபிள்யு குற்றப்புலனாய்வுத்துறை
20. குடிமைப்பொருள் வழங்கல் / குற்றப்புலனாய்வுத் துறை

21. கணினி குற்றப்பிரிவு
22. மாவட்டக் குற்றம் - மாநகரக்குற்றப்பிரிவுகள்
23. சிறப்புப்பணிப்படை
24. பயிற்சிப்படை மற்றும் பள்ளி
25. கடலோரக் காவல்படை
26. விரல் ரேகைப்பிரிவு
27. காவல் துறை வானொலிப்பிரிவு
28. உள் (காவல் VI) துறை
29. உள் (கடும் மந்தணம்) துறை
30. பொது (கடும் மந்தணம்) புலனாய்வு மற்றும் ஒடுங்கமைவனம

## மூன்றாம் தரப்பினரின் தகவல்:

- பொதுத்தகவல் அலுவலர், மூன்றாம் தரப்பினருடன் தொடர்புடையதாக அல்லது மூன்றாம் தரப்பினரால் வழங்கப்பட்ட அல்லது மூன்றாம் தரப்பினரால் ரகசியம் எனக் கருதப்படுகிற தகவல்கள், பதிவுருக்கள் அதன் பகுதிகள் எதனையும் வெளியிடுமிடத்து, அக்கோரிக்கை பெற்ற ஐந்த நாட்களுக்குள், அக்கோரிக்கையினைப் பற்றியும், அந்த தகவலை வெளியிட விரம்புகிறாரா என்றும் மூன்றாம் தரப்பினருக்கு எழுத்து வடிவிலான அறிவிப்பை அளிக்க வேண்டும்.
- அதனுடன் மேற்படி தகவலை வெளியிட வேண்டுமா அல்லது வேண்டாமா என்பது பற்றி எழுத்து வடிவிலோ அல்லது வாய்மொழியாகவோ தனது கருத்தினை அனுப்புமாறு மூன்றாம் தரப்பினரைக் கோருதல் வேண்டும்.
- மேலும் அந்த தகவலை வெளியிடுவது குறித்து முடிவு எடுக்கும்போது, மூன்றாம் தரப்பினரால் அளிக்கப்பட்ட கருத்தினை கவனித்தில் கொள்ளல் வேண்டும்.
- மேற்படி அறிவிப்பு சார்பு செய்யுமிடத்து, அந்த அறிவிப்பு கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள், அந்தத் தகவலை வெளியிடுவதற்கு எதிராக முறையீடு செய்வதற்கு மூன்றாம் தரப்பினருக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்.
- பொதுத்தகவல் அலுவலர், முன்றாம் தரப்பினருடன் தொடர்புடைய தகவல்களை வெளியிடுவது குறித்து முடிவு எடுத்து, அம்முடிவைப் பற்றிய அறிவிப்பை முன்றாம் தரப்பினருக்கு எழுத்து வடிவில் அளிக்க வேண்டும். அதனுடன் அம்முடிவை எதிர்த்து மேல் முறையீடு செய்யும் உரிமையையும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட வேண்டும்.

## மாநில தகவல் ஆணையத்தின் கடமைகள் மற்றும் அதிகாரங்கள்:

- இச்சட்டத்தின் செயல்பாட்டை மேற்பார்வையிடுவதற்காக, பிரிவுகள் 12(1)-15(1) மைய மாநில தகவல் ஆணையங்கள் தனித்தியங்கும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பாக உருவாக்கப்பட்டுள்ளன. தகவல் பெறும் உரிமைச்சட்டம் பிரிவு 15-ன்படி, தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம் உருவாக்கப்பட்டு, அவ்வாணையம், ஒரு மாநில தலைமை ஆணையர் மற்றும் இரண்டு மாநில தகவல் ஆணையர்களின் கீழ் 7.10.2005 முதல் இயங்கி வருகிறது எந்த ஒரு நபரிடமிருந்தும் கீழ்காணும் நிலைமைகளில் புகார்களைப் பெற வேண்டியது, மாநில தலைமைத் தகவல் ஆணையத்தின் கடமையாகும்.
    1. பொதுத்தகவல் அலுவலர் நியமிக்கப்படாததால் தகவல் கோரி விண்ணப்பிக்க இயலாத நிலைமை
    2. கோரப்பட்ட தகவல்கள் மறுக்கப்பட்ட நிலைமை
    3. தகவல் கோரி விண்ணப்பித்தும் அதற்குரிய காலக்கெடு கடந்த பின்பும் எந்த பதிலும் அளிக்கப்படாத நிலைமை
    4. நிர்ணயிக்கப்பட்ட கூடுதல் கட்டணம் நியாயமற்றதாக ஒருவர் கருதும் நிலைமை
    5. தனக்கு வழங்கப்பட்ட தகவல்கள் போதுமானதல்ல என்றோ, தவறான தகவல்கள் வழங்கப்பட்டன என்றோ ஒருவர் நினைக்கும் நிலைமை
- இச்சட்டம் பிரிவு 18ன் கீழ் ஆணையம் விசாரணை தொடங்கலாம். நியாயமான காரணங்களின் கிழ் உரிய விசாரணைக்கு உத்தரவிடுதல் வேண்டும். இப்பிரிவுன்படி, ஒரு கோரிக்கையை விசாரிக்கையில், குடிமையியல் நீதி மன்றங்களுக்கு நிகரான அதிகாரங்கள் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. அவை முறையே
    1. நபர்களின் வருகைக்கு அழைப்பாணை அனுப்பி வலிந்து செயல்படுத்துதல்; வாய்மொழி அல்லது எழுத்து புர்வமான சாட்சியத்தை கொடுக்கவும் மற்றும் ஆவணங்களையும், பொருள்களையும் முன்னிலைப்படுத்த கட்டாயப்படுத்துதல்;
    2. ஆவணங்களை கணிடறிந்து ஆய்வு செய்திட ஆணையிடுதல்
    3. பிரமாணப்பத்திரங்கள் மூலம் சாட்சியங்கள் பெறுதல்
    4. சாட்சிகள் ஆவணங்களை பரிசோதிப்பதற்கான அழைப்பாணை பிறப்பித்தல்
    5. குறித்துரைக்கப்பட்ட ஏதேனம் பொருள் குறித்து
    6. இச்சட்டத்தின்படி, அரசு அல்லது அரசு சார்ந்த அலுவலகங்களிலுள்ள பதிவுருக்கள் எதனையும் ஆய்வு செய்யலாம் மற்றம் அத்தகைய பதிவுருக்களை எக்காரணம் கொண்டும் நிறுத்தி வைக்கப்படலாகாது.
- கீழ்கண்ட அறிவிப்புகள் மூலம் ஆணையம் தனது முடிவுகளை இச்சத்தின் பிரிவு 19(8) வகைமுறைகளுக்கு உட்பட்டு, சம்மந்தப்பட்ட அரசு அல்லது அரசு சார்ந்த நிறுவனங்களக்கு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்த, அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவை முறையே,
    1. குறிப்பிட்ட வடிவத்தில் தகவலை வேண்டுமிடத்து, அவற்றினை அவ்வடிவத்திலேயே அணுகிப் பெறுதல்

2. நேர்விற்கேற்ப, பொது தகவல் அலுவலர் ஒருவரை நியமித்தல்
3. குறித்த சில தகவலை அல்லது தகவலின் வகைகளை வெளியிடுதல்
4. பதிவுருக்களைப் பராமரித்தல், நிர்வகித்தல் மற்றும் அழிப்பதற்கு தொடர்புடைய நடைமுறைகளில், அவசியமான மாற்றங்களைச் செய்தல்
5. அலுவலர்களுக்கு, தகவல் பெறும் உரிமை சட்டம் மீதான பயிற்சிக்கு வகை செயதலை மேம்படுத்துதல்
6. ஆண்டறிக்கை தயாரித்து அளித்தல்.

மேலும் ஆணையத்திற்கு தனது முடிவின் மீது கீழ்கண்ட அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன

1. இழப்பு அல்லது பாதிப்பு உண்டாக்கிய பிற கேடு எதுவாகிலும், முறையீட்டாளருககு இழப்பீடு வழங்குமாறு அரசு அல்லது அரசு சார்ந்த நிறுவனங்களை வேண்டுறுத்தும் அதிகாரம்
2. இச்சட்டத்தின்படி வகைசெய்யப்பட்ட தண்டனைகளில் எதனையும் விதிக்கும் அதிகாரம்
3. விண்ணப்பத்தினை ஏற்கவோ, மறுக்கவோ உண்டான அதிகாரம்

இச்சட்டப்பிரிவு 19(9)ன்படி ஆணையம், மேல்முறையீட்டாளருக்கும், அரசு மற்றும் அரசு சார்ந்த அலுவலகங்களுக்கும், தனது முடிவைக் குறித்த அறிவிப்பினைக் கொடுத்தல் வேண்டும். அதனுடன் மேல்முறையீடு செய்வதற்கான உரிமை பற்றியும் கொடுத்தல் வேண்டும் பிரிவு 19(10)ன்படி வகுத்துரைக்கப்பட்ட நடைமுறைக்கிணங்க, ஆணையம் மேல்முறையீட்டினை முடிவு செய்தல் வேண்டும்.

## மேல்முறையீடு (பிரிவு 19)

### முதல் மேல்முறையீடு (பிரிவு 19)

- குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள், கோரிக்கையின் மீது முடிவு பெற்றிராத அல்லது பொது தகவல் அலுவலர் மீது அதிருப்தி அடைந்த எவரும், அத்தகைய கால அளவு முடிவு பெற்றதிலிருந்தோ அல்லது அத்தகைய முடிவினை பெற்றதிலிருந்தோ, 30 நாட்களுக்குள் சம்மந்தப்பட்ட துறையில், குறிப்பிட்ட பொதுத்தகவல் அலுவலருக்கு மேல் மட்டத்திலுள்ள ஒரு முதுநிலை அதிகாரியிடம் மேல் முறையீடு செய்ய வேண்டும். எனினும் தவிர்க்க இயலாத காரணத்தினால் தாமதமாக முறையிடு செய்தால், விசாரணை அலுவலர் அந்த முறையீட்டை விசாரணைக்கு ஏற்கலாம். இதனை விசாரணை அலுவலர் முடிவு செய்வார்.
- இச்சட்டத்தின் பிரிவு 11ன்படி மூன்றாதம் தரப்பினர் தகவலை வெளிபடுத்துவதற்கு பொதுத் தகவல் அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு எதிராக மேல்முறையீடு செய்யுமிடத்து ஆணையின் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் சம்மந்தப்பட்ட மூன்றாம் தரப்பினர் மேல்முறையீடு செய்து கொளல் வேண்டும்.

### இரண்டாம் மேல்முறையீடு

- முதல் மேல் முறையிட்டின் மீது முடிவு எடுக்கப்பட்ட தேதியிலிருந்தோ அல்லது அந்த முடிவு பெறப்பட்ட தேதியிலிருந்தோ 90 நாட்களுக்குள் அந்த முடிவுக்கு எதிராக மாநில தகவல் ஆணையத்தில் இரண்டாம் மேல் முறையீடு செய்ய உரிமையுண்டு. மேலும் தாமதத்திற்கு உரிய காரணம் தெரிவிக்கப்பட்டால், 90 நாட்கள் கழிந்த பின்னரும் மேல்முறையீட்டை ஏற்றுக் கொள்ளலாம்.
- முதல் மேல் முறையீட்டில் மூன்றாம் தரப்பினரின் தகவல் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையிட்டிற்கு எதிராக பொது தகவல் அலுவலரின் முடிவு இருக்கும் பட்சத்தில், மாநில தகவல் ஆணையம் மூன்றாம் தரப்பினருக்கு கேட்கப்படுவதற்கு நியாயமான வாய்ப்பளித்தல் வேண்டும்.
- இச்சட்டப்பிரிவு 19 உட்பிரிவு (1) மற்றும் (2) ன்படியான மேல்முறையீடானது, எழுதி பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக, மேல்முறையீடு பெறப்பட்டதிலிருந்து 30 நாட்களுக்குள் அல்லது அது தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து மொத்தம் 45 நாட்களுக்கு மேற்படாது, முடிவு செய்யப்படுதல் வேண்டும்.
- தகவல் ஆணையத்தின் மடிவு கட்டுப்படுத்துவதாக இருக்கும்.

# *Special State Level Meeting*











# *State Level 2018 Diary Release*












# Workers Health Camp at Athipet














# Workers Health Camp at Athipet













# Meeting at
# Southern Charitable Trust Building













# GST

Tax Corner

## CONDONATION OF DELAY SCHEME, 2018

All companies registered in India including private limited company, one person company, limited company, section 8 company and others are required to file annual return with the Ministry of Corporate Affairs each year.

